மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, அது அரசாங்கத்தின் படகு அல்ல. தனியாருக்குச் சொந்தமான படகு. சில விதிமுறைகளை அனுஷ்டிக்க வேண்டுமென்று அரசாங்கம் சொல்கிறது. அந்த விதிமுறைகளை படகு வைத்திருப்பவர்களும், பொதுமக்களும் சேர்ந்து ஒத்துழைப்பதன் மூலம்தான் இதுபோன்ற விபத்துக்களைத் தடுக்க முடியும்.

(ஆ) சில்லறை அங்காடிகளில் அரிசி விலை உயர்வும் அதன் விளைவாக ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகள் குறித்து

MR. SPEAKER : Now the hon. Member Thiru K. T. K. Thangamani will call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance.

THIRU K. T. K. THANGAMANI : Sir, I now call the attention of the Hon. Minister for Food and Revenue to a matter of urgent public importance, namely, the abnormal rise in the price of rice in the retail market and consequent agitation in several places including Pollachi.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆண்டுதோறும் ஜுலை முதல் செப்டம்பர் வரை விலைவாசிகள் ஏறுமுகமாய் இருப்பது வழக்க மாகும். அறுவடையை அடுத்து விலைகள் சரியும். அங்காடிகளுக்கு உணவு தானியங்கள் வருவது குறையக் குறைய விலைவாசிகளும் ஓரளவுக்கு ஏறத்தான் செய்யும். அறுவடைக் காலத்தில் கொள்முதல் செய்த அரிசி இருப்புகளை அதற்குப் பின்னர் அங்காடிகளுக்கு ஏற்றி அனுப்புவதற்காகும் கூடுதல் செலவுகளின் நிமித்தமாகவே இவ்வாறு விலைகள் உயர்வுக்கு இடமேற்படுகிறது.

எனினும் தற்போதைய விலைவாசிகளையும் கடந்த ஆண்டு இதற்கு நிகரான காலத்தில் நிலவி வந்த விலைவாசிகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால், குறிப்பாக இரண்டாம் தர, மூன்றும் தர அரிசி வகை களின் விலைவாசிகள் ஏறியிருப்பது தெரிகிறது. தென் மாவட்டங் களில் இவ் விலைவாசி உயர்வு அவ்வளவு அதிகமாகத் தெரியவில்லை. உற்பத்தியாளர்களோ, வியாபாரிகளோ, பெருமளவில் நெல் இருப்புகளைப் பதுக்கி வைக்கிறுர்களா என்று அரசு நிலைமையை மிக விழிப்புடன் கண்காணித்து வருகின்றது. பற்ருக்குறை போன்ற நிலைமையை உருவாக்கி அதைப் பயன்படுத்திக் கொள்வதற்காக வியாபாரிகள் தீவிரமாக முயற்சி செய்தால், அதைத் தடுத்து மக்களில் மிக எளிய பிரிவினரின் நலனுக்காகத் தேவையான அளவுக்கு அரிசி இருப்புகளை அனுப்புவதற்கு அரசிடம் போதிய அளவுக்கு அரிசி இருப்புகள் உள்ளன. சம்பா அறுவடையின்போது ஏறத்தாழ 15,000 டன் அரிசியைக் கொள்முதல் செய்திருந்த இந்திய உணவுக் கார்ப்பொரேஷனும் தனக்குக் கட்டுப்படியாகும் விலைக்கு அந்த இருப்புகளை வழங்கவும் முன் வந்துள்ளது. தஞ்சை மாவட்டத்தில் அவ்வாறு அரிசி இருப்புகளை வழங்க முற்பட்டுள்ளோம். அரிசி கிடைக்கவில்லையென்ருே அது குறித்து கிளர்ச்சி ஏதும் நிகழ்ந்த தாகவோ அரசுக்கு அறிக்கைகள் ஏதும் வரவில்லை. கடந்த

ஆண்டுடன் ஒப்பிடும்போது விலைவாசிகள் ஓரளவுக்கு உயர்ந்திருப்பினும், ஆண்டின் இப் பகுதியில் அவை வெகுவாக உயர்ந்து விட்டன என்று சொல்வதற்கில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், படியரிசி அமலாகியிருந்த சென்னை, கோவை போன்ற இடங்களில் எல்லாம் அதிகமான விலை உயர்ந்திருக்கிறது என்ற தகவல் எங்களுக்கு வந்திருக்கிறது, குறிப்பாக பொள்ளாச்சி போன்ற இடங்களிலே. தஞ்சை மாவட்டத்திலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது போன்று சென்னை, கோவை போன்ற இடங்களிலும் நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே சென்னையிலே படியரிசி கொடுக்கக்கூடிய திட்டத்தை அரசு மேற்கொண்டு இருக்கிறது. பொள்ளாச்சியிலே படியரிசித் திட்டம் இல்லை. வேறு எங்காவது அப்படி விலை உயர்ந்திருக்கிறது என்ற தகவலை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தந்தால் அங்கே அரிசியை அனுப்பி விலை குறைவதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.

(7) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) 1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிகால நீட்டிப்பு) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1971).

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "1971-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த, பதவிக் கால நீட்டிப்பு) சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1971) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the fol owing amendment :—

"That the concurrence of the Legislative Council be obtained for setting up a Joint Select Committee of both the Houses consisting of ......members (...... members from the Legislative Assembly and..............members from the Legislative Council) to consider the Madras City Municipal Corporation and Tamil Nadu District Municipalities (Amendment and Extension of term of Office Bill, 1971 (L.A. Bill No. 27 of 1971) and that the following Members of the House be selected to surve on such a Joint Select Committee (Names of members to be furnished later).

The amendment was duly seconded.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நகராட்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றங்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளேயாகுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களின் பதவிக்காலத்தைப் போன்றே, இம்மன்றங்

* 1971-ம் ஆண்டு ஜூலை திங்கள் 24-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.